**Revised**

**செய்தி வெளியீடு எண்: 983** **நாள்: 08.11.2010.**

**முதல்வர் கலைஞர் தலைமையில் இன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்ட நடவடிக்கைகள்**

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் – புதிய தலைமைச் செயலக–சட்டப் பேரவை வளாகத்தில் மிகுந்த பொலிவோடு அமைக்கப்பட்டுள்ள அமைச்சரவைக் கூட்ட அரங்கில் – நடைபெற்ற 49வது அமைச்சரவைக் கூட்டத்தின் தொடக்கத்தில்; தமிழக அமைச்சர்களின் சார்பில் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் :

> "வரலாற்றுச் சிறப்புமிக்க புதிய சட்டப்பேரவை வளாகத்தை உருவாக்கி; அதில் அமைச்சர்களாக இருந்து பணியாற்றிடவும் – எழில்ததும்பும் அமைச்சரவைக் கூட்ட அரங்கில் அமர்ந்து கலந்து கொள்ளவுமான வாய்ப்பினை வழங்கி; அதன் மூலம் வரலாற்றில் அமைச்சர்கள் அனைவருக்கும் இடமளித்தவர் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள்தான் என்பதை எண்ணும்போது நெஞ்சம் இனிக்கிறது; கண்கள் பனிக்கின்றன''

– என்று உணர்ச்சிபொங்க ஆற்றிய நன்றியுரையை அமைச்சர்கள் அனைவரும் ஒருமனதாகக் கையொலியெழுப்பி வரவேற்று மகிழ்ந்தனர்.

பின்னர், அமைச்சரவைக்கான பொருள்கள் நிரல்படி விவாதிக்கப்பட்டு, முடிவுகள் பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டன :

''டான்சி''யின் துணை நிறுவனமான ''செஸ்காட்'' (State Engineering and Servicing Company of Tamil Nadu) நிறுவனத்தை 8.6.2000 அன்று எடுக்கப்பட்ட முடிவினையொட்டி; டான்சியோடு ஒருங்கிணைக்கும் திட்டம் பொதுநலத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது என்பதால், அதனை ஏற்றுக் கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை இணையத்தின் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்காக, ''டான்சி''க்குச் சொந்தமான நிலத்தை வாங்கியதற்கு, முத்திரைத்தாள் கட்டணத்தைக் குறைத்திட வேண்டுமென்ற கோரிக்கையினை ஏற்பதென முடிவு செய்யப்பட்டது.

கிருட்டிணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டத்தில், ஆனேகொள்ளு கிராமத்தில்; ‘‘பேஸ் நிறுவனம்’’ – வாகனங்களுக்கான மின்கலங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை 350 கோடி ரூபாய்ச் செலவிலும், 400 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு வழங்கும் வகையிலும் அமைத்திட உள்ளதால்; அந்தத் தொழிற்சாலைக்கு வழக்கமாக வழங்கப்பட்டுவரும் தொகுப்புச் சலுகைகளை வழங்குவதென்று முடிவு செய்யப்பட்டது.

தமிழ்நாட்டில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் மாணவ மாணவியர் சேருவதற்கு, அவர்கள் 12ஆம் வகுப்பில் பெற்றிருக்க வேண்டிய குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்கள்; பொதுப் பிரிவினருக்கு 50 விழுக்காடு என்றும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 45 விழுக்காடு என்றும், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினருக்கு 40 விழுக்காடு என்றும், பட்டியல் இனத்தவர் மற்றும் மலைவாழ்ப் பழங்குடியினருக்கு 35 விழுக்காடு என்றும்; ஏற்கனவே **2010–2011**–ஆம் கல்வியாண்டு முதல் நிர்ணயம் செய்து, அரசாணை வெளியிட்டதற்கு, பின்னேற்பு வழங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

பின்னர், புயல்–மழையின் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்பு, கால்நடை இழப்பு போன்ற சேதங்களைப் பற்றி விவாதிக்கப்பட்டு; மாவட்ட ஆட்சியர்கள் நிவாரண நடவடிக்கைகளை முறையாகவும், வேகமாகவும் மேற்கொள்ளத் தேவையான அறிவுரைகளை வழங்குவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9

* * *